

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# சிவகுரு புனிதவதியம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# புனித தீபம்

23.03.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்



எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாதுகாத்து
எமக்கு நல்வழி காட்டி
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் அன்புத்தெய்வத்தின் பாதகமலங்களுக்கு
இம் மலரினைக் காணிக்கையாக்கி
பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'



சுற்றம் மகிழ

17 . 08 . 1929

சுற்றம் நெகிழ

21 . 02 . 2010

# அமரர்
# சிவகுரு புனிதவதியம்மா

## திதி வெண்பா

மன்னு விரோதியாண்டு மாசிநற் திங்களிலே
துன்னு பூர்வ பக்கத்துச் சப்தமியில் - இன்மொழிசேர்
அன்னை புனிதவதியம்மா அறுமுகன் தாள்
எண்ணி நடந்தாள் இயம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடு மானந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானுக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சிவகுரு புனிதவதியம்மா அவர்களின் வாழ்வியல் சுவடு பற்றியது............

1. ஜெனனம்:

எட்டுரும் புகழ் வட்டூர் முத்தர் வழித்தோன்றலர் மரபுதித்த கந்தசாமி செங்கமலம் தம்பதிகட்கு 17.08.1929ம் ஆண்டு இரண்டாவது மகளாக அவதரித்தார்.

2. கல்வி:

ஆரம்பக் கல்வியை யா/வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் பயின்றார்.

3. திருமணம்:

நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியினரின் இரண்டாவது அருந்தவப் புதல்வன் சிவகுரு என்பவரை 1949ம் ஆண்டு திருமணம் செய்தார்.

4. இழந்தைச் செல்வம்:

19-02-1953 இல் சிரேஷ்ட புத்திரனாக வசந்தநாதன் அவர்களைப் பெற்று பேருவகை கொண்டார்.

5. இரண்டாவது மகவு:

29-05-1955இல் சிரேஷ்ட புத்திரியான வசந்தமதி என்பவரைப் பெற்று இன்புற்றார்.

6. மேலும் இழந்தைச் செல்வங்கள்:

இரண்டாவது மகளாக வசந்தினியையும், இரண்டாவது மகனாக வசந்தராஜனையும், மூன்றாவது மகளாக வசந்தமாலினியையும், நாலாவது மகளாக வசந்தாவையும், ஐந்தாவது மகளாக வசந்தரதியையும், மூன்றாவதும் கடைசிப் புத்திரனுமாகிய இமைகரனையும் பெற்றுப் பேருவகை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கணவர் பெறும் பிரிவு:

19–02–2002 இல் தனது பாசமிகு கணவரான சிவகுருவின் பிரிவால் தாங்கொணாத துயரில் தவிப்பு.

8. மக்களின் திருமணங்கள்:

மூத்தமகள் வசந்தமதிக்கு நித்தியானந்தனையும், இரண்டாவது மகள் வசந்தினியைச் சேகரனுக்கும், இரண்டாவது மகன் வசந்தராஜனை யசித்திராவுக்கும், மூன்றாவது மகள் வசந்தமாலினியை சந்திரபாலனுக்கும், நான்காவது மகள் வசந்தாவை மனோகரனுக்கும், ஐந்தாவது மகள் வசந்தரதியை கௌரிசங்கருக்கும் முறையே திருமணம் செய்து மகிழ்வெய்தினார்.

9. பேரர், பேர்த்தியர் பிறப்பால் பேருவகை:

மூத்தமகள் மூலம் சஞ்சிகா எனும் முதல் பேர்த்தியையும், சுபாகரன் எனும் பேரனையும், இரண்டாவது மகன் மூலம் வர்மன் எனும் முதல் பேரனையும், அச்சுலன், கமலாயினி, வாசினி ஆகிய பேரர் பேர்த்தியரையும், மூன்றாவது மகள்மூலம் றொசனா, வச்சலா, சகிதா ஆகிய பேர்த்திகளையும், நான்காவது மகள் மூலம் டிலோசன், நிதர்சன், விமல்சன் ஆகிய பேரர்களையும், ஐந்தாவது மகள் மூலம் மதர்சனா எனும் பேர்த்தியையும், சிவன்சங்கர், ஆதர்சன், சிவன்சாரங்கன் எனும் பேரர்களையும் கண்டு பேருவகை கொண்டார்.

10. பூவுலக வாழ்வை நீத்தல்:

விரோதியாண்டு மாசி நற்திங்கள் நாளில், பிற்பகல் 4.30 மணியளவில், 81 அகவையை நிறைவு செய்து எல்லாம் வல்ல வன்னியன் தோட்ட அருள்மிகு சின்னக்கதிர்காமத்தையன் பொன்னடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அம்மாவே!

பிறந்தோம் வளர்ந்தோம் மீதி ஒரு பிடிசாம்பல்
நாங்கள் எத்தனை காலம்
இருக்கப்போகின்றோம் தெரியாது!
எங்களுக்கு இனி அம்மா இல்லை
அம்மா நீ நிம்மதியாய் படுத்திருக்கிறாய்
எங்களுடைய மனம் உடையுதம்மா
அழுது புலம்புகிறோம் அழுது புலம்புகிறோம்
எங்களுடைய அம்மா திரும்பி வருவாயா?
அம்மா முழு நேரமும் படுக்காதை
அம்மா எழும்பிக் கதையம்மா
உன்னுடைய சினமில்லா வார்த்தைகளால்
அம்மா என்னை உன்னுடைய பிள்ளை தான் என்று
ஒரு முறை சொல்லி விடுவாயா
என்று ஏங்குகிறேன்!

மகள்
வசந்தா மனோகரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் அருளிச் செய்த
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ் ஒளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குடிவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித் [து]
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைப்பிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலம்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்தன் சிந்தைதெளிவித் [து]
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந் தமளித்[து]
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

## முருகன் துதி

ஏறுமயில் ஏறி விளை யாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரக வழிபாட்டு ஸ்தோத்திரம்

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

**பலன்: வீட்டில் செல்வம் பெருகும்!**

### சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி!

**பலன்: நோயற்ற வாழ்வு பெருகும். எல்லா நலன்களும் பெருகும்.**

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**பலன்: எல்லோராலும் வேண்டப்பட்டு சந்தோஷம் பெருகும்!**

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

**பலன்: நல்லவற்றையே பேசி, நல்லறிவு பெருகும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்!

**பலன்: செல்வம் பெருகும், துன்பங்கள் மறையும்.**

## சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுப சுக மீவாய்
வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!

**பலன்: எல்லா நன்மைகளும் பெருகி நவக்கிரகங்களின் அருளைப் பெறலாம்.**

## சனி

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்!
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

**பலன்: கடன்கள் நீக்கிச் செல்வம் செழிக்கும்!**

## ராகு

அரவெனும் இராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மிய போற்றி!

**பலன்: விரோதிகள் அழிந்து எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரஷி!

**பலன்: எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.**

வேலும் மயிலும் துணையிருக்கு
வேறு பயமேனுனக்கு
பாலன் பாதம் நிதம் பணிவாய்
பாமாலை புனைந்து நீ அணிவாய்

## ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய
# கந்தசஷ்டிக் கவசம்
## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்களும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் (து) அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்துமுந்து முருகவேள் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகு வேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள் வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக்குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறக் காக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத்தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லிட இடிவிழுந்தோடிட
ஆனைஅடியினில் அரும்பாவைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக்கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது ஆக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒரு தலை நோயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழு லகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரு திரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனைஅழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப்பதிவாழ்பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரி வாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் நான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தன் என்மீது மனமகிழ்ந்து அருளித்
தஞ்சம் என் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறு உருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துணவாகச்
சூர பத்மாவைத் துணித்த கை அதனால்
இருபத்தேழ்வருக்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழனிக்குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.
(முற்றிற்று)

## சிவநாமாவளித் திரட்டு

**இராகம் :ஹிந்துஸ்தான் பியாக்**
**தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

அம்பலத்தரசே அருள்மருந்தே
ஆனந்தத்தேனே அருள்விருந்தே
பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலை மானே
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந் தரகுஞ் சிதநட ராஜா
படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
அந்தண வங்கண அம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா
அம்பர விம்ப சிதம்பர நாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கனக சிதம்பர கங்கர புரகர
அனக பரம்பர சங்கர புரகர
சகல கலாண்ட சராசர காரண
சகுண சிவாண்ட பராபர பூரண
இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பர சக்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தம தே
இனிப்பது நடராஜ புத்தமு தே
ஐயர் திருச்சபை யாடக மே
ஆடுத லானந்த நாடக மே
உத்தர ஞான சிதம்பர மே
சித்தியெ லாந்தரு மம்பர மே
அம்பல வாசிவ மாதே வா
வம்பல வாவிங்கு வாவா வா
நடராஜ னெல்லோர்க்கும் நல்லவனே
நல்லவெ லாஞ்செய வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போனகங் கொண்டோ மே
சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா
சந்தத முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கீத மென்பது சற்சன வசனம்
சங்கர சிவசிவ மாதே வா
எங்களை யாட்கொள வாவா வா
அரகர சிவசிவ மாதே வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளமு தந்தர வாவா வா
நடன சிகாமணி நவமணி யே
திடன சிகாமணி சிவமணி யே
நடமிடு மம்பல நன்மணி யே
புடமிடு செம்பல பொன்மணி யே
உவட்டாதுதித்திக்கும் உள்ளமு தே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமு தே
நடராஜ வள்ளலை நாடுத லே
நம்தொழி லாம்விளை யாடுத லே
அருட்பொது நடமிடு தாண்டவ னே
அருட்பெருஞ் ஜோதியென் ஆண்டவ னே
நடராஜ மாணிக்கம் ஒன்றது வே
நண்ணுத லாணிப்பொன் மன்றது வே
நடராஜ பலமது நம்பல மே
நடமாடு வதுந்திரு வம்பல மே
நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
சீவர்கள் பாட்டெல்லாந் தெருப் பாட்டு
அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட் பாட்டு
அம்பல வாணனை நாடின னே
அவனடி யாரொடுங் கூடின னே
தம்பத மாம்புகழ் பாடின னே
தந்தன வென்றுகூத் தாடின னே
நான் சொன்ன பாடலுங் கேட்டா ரே
ஞான சிதம்பர நாட்டா ரே
இனித்துயர் படமாட்டேன் விட்டே னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்குரு மேலாணை யிட்டே னே
இனிப்பாடு படமாட்டேன் விட்டே னே
என்னப்பன் மேலாணை யிட்டே னே
சன்மார்க்கம் நன்மார்க்கம் நன் மார்க்கம்
சகமார்க்கந் துன்மார்க்கந் துன் மார்க்கம்
நாதாந்த நாட்டுக்கு நாயக ரே
நடராஜ ரேசபா நாயக ரே
நான் சொல்லு மிதுகேளீர் சத்தியமே
நடராஜ வெனில் வரும் நித்தியமே
நல்லோ ரெல்லார்க்குஞ் சபா பதியே
நல்வர மீயுந் தயா நிதியே
நடராஜர் தன்னடம் நன்னட மே
நடம்புரி கின்றதும் என்னிட மே
சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளை யே
திருவாள னானவன் சீர்ப்பிள்ளை யே
சிவகாம வல்லியைச் சேர்ந்தவ னே
சித்தமெல்லாஞ் செய்திடத் தேர்ந்தவ னே
இறவா வரந்தரும் நற்சபை யே
எனமறை புகழ்வது சிற்சபை யே
என்னிரு கண்ணுள் இருந்தவ னே
இறவா தருளு மருந்தவ னே
சிற்சபை யப்பனை யுற்றே னே
சித்தியெலாஞ் செயப் பெற்றே னே
அம்பல வாணர்தம் அடியவ ரே
அருளர சாள்மணி முடியவ ரே
அருட்பெருஞ் ஜோதியைக் கண்டே னே
ஆனந்தத் தெள்ளமு துண்டேனே
இருட்பெரு மாயையை விண்டே னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாஞ்செய் சித்தியைக் கொண்டே னே
கருணா நிதியே குணநிதி யே
கதிமா நிதியே கலாநிதி யே
தருணா பதியே சிவபதி யே
தனிமா பதியே சபாபதி யே
கருணா நிதியே சபாபதி யே
கதிமா நிதியே பசுபதி யே
சபாபதி பாதம் தபோ பிரசாதம்
தயாநிதி போதம் சதோதய வேதம்
கருணாம் பரவர கரசிர பவபவ
அருணாம் பரதர கரகர சிவசிவ
கனகா கரபுர ஹரசிர கரதர
கருணா கரபர சுரவர ஹரஹர
கனக சபாபதி பசுபதி நவபதி
அனக உமாபதி அதிபதி சிவபதி
ஏகாந்த சர்வேச சமோதம
யோகாந்த நடேச நமோ நம
ஆதாம்பரவாடக வதிசயசய
பாதம்புசநாடக வதிசயசய
போதாந்தபுரேச சிவகாம
நாதாந்தநடேச நமோநம
ஜாலகோலகன காம்பரசாயாக
காலகாலன காம்பரநாயக
உபலசிரதல சபாணவங்கண
சுபலகரதல கணபணகங்கண
அபயவரதகந தலபுரிகாரண
உபயபரதபத பரிபரிபூரண
அகரவுகரசுப கரவரசினகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகரவகரநவ பரசிரதினகர
வகரசிகரதின தாயசிகரபுர
மகரவகரவர புரஹரஹர
பாமமந்திரிசக ளாகளசரணா
படனதந்திரநிக மாகமசரணா
அனந்கோடிகுண கரகரசொலிதர
அகண்டவேதசிர சரதபலிதர
பரிபூரண ஞானசிதம்பர
பதிகாரண நாதபரம்பர
சிவஞானப தாடகநாடக
சிவபோதவ ரோகளகூடக
சகலலோகபர காரகவாரக
சபளயோகசர பூரகதாரக
சத்வபோதக தாரணதன்மய
சத்யவேத பூரணசின்மய
வரகேசாந்தம சோதரியகாரிய
பரபாசாந்த சுகோதயசூரிய
பளிததீபக கோபிதநாதா
லளிதரூப ஸ்தாபிதநாதா
அனுர்தபோப கருணாம்பதபாதா
அமிர்தரூப கருணாம்புசபாதா
அம்போருகபத அரஹரசங்கர
சம்போசிவசிவ சிவசங்கர
சிதம்பரகாசா பரம்பிரதாசா
சிதம்பரேசா சுயம்பிரகாசா
அருட்பிரகாசம் பரப்பிரகாசம்
அகம்பிரகாசம் தவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பிரகாசம் தவப்பிரகாசம்
நவப்பிரகாசம் சிவப்பிரகாசம்
நாதபரம்பரனே பரநாத சிதம்பரனே
நாததிகம்பரனே தசநாதசுதந்திரனே
ஞானநடத்தவனேபர ஞானியிடத்தவனே
ஞானவரத்தவனே சிவஞானபுரத்தவனே
ஞானசபாபதியேமறை நாடுசதாகதியே
தீனதயாநிதியே பரதேவியுமாபதியே
புத்தந்தரும்போதா வித்தந்தருந்தாதா
நித்தந்தரும்போதா சித்தந்திரும்பாதா

திருச்சிற்றம்பலம்.

## கீர்த்தனம்

**அருள்செய்வாய் வாணி**
**அழகிய வேத புராணி**
**திருமால் மருகி இ இ இ...............**
**முத்துமாரியம்மன் வாழி வணக்கம்–**

**1. வாசலிது வாசலிது – எங்கள்**
**மாரியம்மன் வாசலிது**
**(வாசலிது)**

**2. தேசமெல்லாம் புகழ்படைத்த – எங்கள்**
**தேவியுமை வாசலிது**
**(வாசலிது)**

**3. அண்டமெல்லாம் கிடுகிடுக்கும் – எங்கள்**
**ஆதி சக்தி வாசலிது**
**(வாசலிது)**

**4. கோயிலிது கோயிலிது – எங்கள்**
**கோதையுமை கோயிலிது**
**(கோயிலிது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆயிரம் கண்ணுடைய – எங்கள்
ஆதிபரை கோயிலிது (கோயிலிது)

6. முடிபுனைந் தாடல் புரிந்து – நாங்கள்
முற்றி முடிதான் கழற்ற (வாசலிது)

7. அடிபணிந்து மலர்சொரிந்து – வாழி
அகமகிழ்வாகவே புரிவோம் (வாசலிது)

8. வாழி வாழி மாரியம்மன் – வாழி
மங்களம் மாதா சிவைக்கே (வாசலிது)

9. சந்நிதியே சந்நிதியே – சிவ
சம்பு உக் (கி) ரன் சந்நிதியே (சந்நிதியே)

10. மின்னும் முடிகள் புனைந்து – நாங்கள்
மேவு நடமே புரிந்தோம் (சந்நிதியே)

11. சென்னிமிசை மலர்சொரிந்து – உங்கள்
திருப்பாதம் நாம் பணிந்தோம் (சந்நிதியே)

12. முடியிறக்க வரமருள்வீர் –சாமி
முக்கணனே வீரபத்திரா (சந்நிதியே)

13. வாழி வாழி வேழமுகன்–வடி
வேலவனும் வாழியவே (வாழி)

14. வாழி வாழி சூலபாணி–நல்
வாமதேவன் வாழியவே (வாழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. வாழி துர்க்கையோடு ஐயன்–மகா
விட்டுணுவும் வாழியவே (வாழி)

16. வாழி உக்கிரன் வாழியவே–திவ்விய
வாழிபத்திரை வாழியவே (வாழி)

17. வாழி சொல்லி வைரவற்கும்–மங்களம்
எல்லவர் தமக்கே (வாசலிது)

## தெரிந்து கொள்ளுங்கள்

⌘ உலகமெங்கும் 5000 மொழிகள் பேசப்படுகின்றன.

⌘ சராசரி மனிதனின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள்

⌘ நண்டிற்கு பற்கள் அதன் வயிற்றிலே தான் உண்டு

⌘ சிலந்திக்கு எட்டுக் கண்கள் உண்டு

⌘ நன்கு வளர்ந்த மனிதனில் உள்ள எலும்புகள் 206 ஆகும்

⌘ மனித உடலில் உள்ள பெரிய சுரப்பு ஈரல் ஆகும்.

⌘ உயரமான நாடு தீபெத் ஆகும்

⌘ கரப்பொத்தானின் தலையைத் துண்டித்தாலும் அது ஏழு நாட்கள் வரை உயிர்வாழும்.

⌘ பிள்ளைகள் பிறப்பது முட்டுக்கால் சிரட்டை இன்றியே. உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் 6 வயதிலே அது வளர்கின்றது.

⌘ பல நாடுகளில் மாட்டுச் சாணத்தைத் தட்டிக் காயவிட்டுக் குற்றியாக்கி எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர்.

⌘ வீடுகளில் சேரும் தாவர, விலங்குக் கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி உயிர்வாயுவை உற்பத்தி செய்து சக்தியைப் பெறலாம்.

⌘ மனித உடலில் வளராத உறுப்பு கண்மணி ஆகும்.

⌘ நள்ளிரவுச் சூரிய உதய நாடு நோர்வே ஆகும்.

⌘ ஆமைகள் 350 ஆண்டுகள் கருத்தரிக்க வல்லன.

⌘ அரசியலின் தந்தையெனப் போற்றப்படுபவர் அரிஸ்ரோட்டிஸ் ஆவார்.

## விநோத உயிரினங்கள்

❁ அதிக நீர் அருந்தும் பறவை புறா

❁ மிகச்சிறிய முட்டையிடும் பறவை தேன்சிட்டு

❁ சத்தமிடாத விலங்கு ஒட்டகச்சிவிங்கி

❁ ஞாபகசக்தி கூடிய விலங்கு யானை

❁ நீல நிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் நண்டு, இறால்

❁ பல்லில்லாத முலையூட்டி தேவாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ கடல்நீரைப் பருகும் பறவையினம் பென்குயீன்

❁ பறக்கும் போதே தூங்கும் பறவை ஆல்பட்றாஸ்

❁ மிகப்பெரிய வாயுள்ள விலங்கு நீர் யானை

❁ பித்தப்பை இல்லாத முலையூட்டி எலி

❁ நாக்கு இல்லாத ஊர்வன முதலை

❁ பறக்கும் முலையூட்டி வௌவால்

❁ நீந்தத் தெரியாத விலங்கு ஒட்டகம்

## மருத்துவம்

☞ மருத்துவத்தின் தந்தை கிப்போ கிறட்டீஸ்

☞ மனித உடலின் சாதாரண வெப்பநிலை 98.4° கு

☞ குருதியின் வகைகள் யுஇ டீஇ யுடீஇ மு

☞ பொது வழங்கி குருதி வகை மு

☞ பொது வாங்கி குருதி வகை AB

☞ காச நோய்க்குரிய தடுப்பு மருந்து BCG

## விண்வெளி பற்றிய தகவல்கள்

❖ ஐக்கிய நாடுகள் சபை 1992 ஆம் ஆண்டைச் சர்வதேச

விண்வெளி ஆண்டெனப் பிரகடனம் செய்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உலகின் முதலாவது விண்ஓடமான கொலம்பியா அமெரிக்காவால் 1981 ஏப்பிரல் 12 ஆம் திகதி விண்வெளிக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.

❖ 1983 ஓகஸ்ட் 30 இல் சலஞ்சர் இல் அமெரிக்காவின் நீக்ரோ வீரர் குயன் எஸ் பூநா போர்ட் பயணமானார்.

❖ 1990 ஒக்ரோபர் 09 இல் சூரியனை ஆராய யுலீசர் என்ற விண்கலத்தை **"Discovery shuttle"** மூலம் அமெரிக்காசெலுத்தியது.

❖ விண்வெளிப் பயண விதிகளை முதல் வரையறுத்த அறிஞர் சேர் ஐசாக் நியூட்டன் ஆவார். இவரது இயற்கைத் தத்துவத்தின் கணிதக் கோட்பாடுகள் இதனை வரையறுத்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எம்குலவிளக்காம், **திருமதி சிவகுரு புனிதவதியம்மா** அவர்கள்இறைபதமெய்திய செய்தியால் விளம்பற்கரிய வேதனையில் நாமிருக்கையில், அருகிலிருந்து ஆறுதல் கூறி எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னாரது இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டவர்க்கும், பல வகையிலும் எமக்குதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், வெளிநாடுகளில் துக்கம் கொண்டாடிய எமது உறவுகளுக்கும், இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய அருண்ஸ் பதிப்பகத்தாருக்கும், இந்நூலைத் தொகுத்தளித்த ஐயாத்துரை சிறீஞானநாதன் அவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரை விருட்சம்

கந்தசாமி + செங்கமலம்

**புனிதவதியம்மா**
**(அமரர்)**

கைலாயவதியம்மா
+
துளசிமாலை
(அமரர்)

வசந்தமாலினி
+
சந்திரபாலன்

றொசனா
வச்சலா
சகிதா
(கனடா)

வசந்தா
+
மனோகரன்

டிலோசன்
நிதர்சன்
விமல்சன்
(அமெரிக்கா)

வசந்தரதி
+
கௌரிசங்கர்

மதர்சனா
சிவன்சங்கர்
ஆதர்சன்
சிவன்சாரங்கன்
(கனடா)

இமைகரன்
(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.



Pillaiyar

அருண்ஸ் பதிப்பகம், சிந்துபுரம், வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org